DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.321/2025

Deposition of DW1

Name	:	திரு.சுந்தரமூர்த்தி
Father's / Husband Name	:	குருநாதன்
Village	:	சின்னமனூர்
Taluk	:	உத்தமபாளையம்
Calling	:	
Age	:	45

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of July 2026.

புகார்தாரர் ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

1. புகார்தாரரை எனக்கு தெரியாது. கடந்த 2022 ல் எனது மனைவி சத்யாவிற்கு விபத்து ஏற்பட்டது. அதனால் எனக்கு பணம் தேவைப்பட்டால் கம்பத்தை சேர்ந்த முருகேசன் என்பவரிடம் ரூ.2 லட்சம் பணம் வட்டிக்கு வாங்கினேன். அவர் என்னிடம் பொறுப்பிற்காக காசோலை கேட்டார். என்னிடம் காசோலை இல்லை என்று கூறினேன். எனது மனைவி பெண்கள் சுயஉதவி குழுவிற்காக எடுத்து வைத்திருந்த காசோலையில் சத்யாசுந்தரமூர்த்தி என்று எழுதியுள்ளதால், அதில் என்னை கையொப்பம் செய்யும்படி முருகேசன் கூறினார். அவ்வாறு கையொப்பம் செல்லாது என்று நான் கூறியபோது காசோலையில் என்னை கையொப்பம் செய்யும்படி கூறி கையொப்பம் வாங்கினார். மேற்படி காசோலையில் எனது மனைவி கையொப்பம் செய்யவில்லை. முருகேசன் எனது வங்கி கணக்கிற்கு ரூ.2 லட்சம் அனுப்பினார். மேற்படி பணத்தை ஒரு மாதத்தில் Gpay மூலம் முருகேசனுக்கு திருப்பி அனுப்பினேன்.

2. 2024 வரை அவருடன் வரவு செலவு வைத்திருந்தேன். கடைசியாக ரூ.50 ஆயிரம் பாக்கி இருப்பதாக முருகேசன் கூறினார். அந்த

தொகையும் நான் அவரது வங்கி கணக்கில் செலுத்திவிட்டேன். காசோலையை திருப்பி கேட்கும்போது வார வட்டிதான் போட்டேன் என்றும், மாத வட்டி போடவில்லை என்று சொன்னால் எனக்கும், அவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அவரது வேலை பார்க்கும் நபரிடம் காசோலையை கொடுத்துவிடுவதாக கூறி என்னை அனுப்பி விட்டு காசோலையை அவர் கொடுக்கவில்லை. சின்னமனூரில் ஒருநாள் பொன்னுச்சாமி தியேட்டர் அருகே முருகேசனை பார்த்து காசோலை கேட்டபோது தரமுடியாது என்று கூறியதால் எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு என்னை பார்த்து கொள்வதாக கூறி விட்டு சென்றுவிட்டார். பின்பு காசோலையை வைத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3. பின்னர் நான் சின்னமனூர் காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்திருந்தேன். **மேற்படி புகார்மனு எ.சா.ஆ.1 ஆகும்.** தேனி, S.P.அலுவலகத்திலும் புகார் கொடுத்திருந்தேன். **மேற்படி புகார்மனு எ.சா.ஆ.2 ஆகும்.** S.P.அலுவலகத்திற்கு புகார் மனு அனுப்பியதற்கான ஒப்புதல் அட்டையை தாக்கல் செய்கிறேன். **மேற்படி புகார்மனு எ.சா.ஆ.3 ஆகும்.** நான் முருகேசனுக்கு பணம் செலுத்தியதற்கும், முருகேசன் எனக்கு பணம் செலுத்தியதற்கான எனது இந்தியன் வங்கியின் கணக்கு பட்டியலையும், SBI வங்கியின் கணக்கு பட்டியலையும் தாக்கல் செய்கிறேன். **இந்தியன் வங்கியின் கணக்கு பட்டியல் எ.சா.ஆ.4 ஆகும். SBI வங்கியின் கணக்கு பட்டியல் எ.சா.ஆ.5 ஆகும்.** முருகேசன் எனக்கு மொத்தம் ரூ.678000/- Gpay மூலம் செலுத்தியுள்ளார். ரூ.981000/- வட்டி மற்றும் அசல் சேர்த்து நான் முருகேசனுக்கு பணம் செலுத்தியிருந்தேன். நான் கூலி வேலைக்கு செல்கிறேன். சொந்தமாக வீடு இல்லை. வாடகை வீட்டில் இருக்கிறேன். எனது மனைவிக்கு கால் ஊனம் ஆகும். இது பொய் வழக்காகும்.

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.09 15:24:50 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam